**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**ID.No. : 251/2019 WW1**
**Name : திரு.தயாளன்**
**Date : 10.09.2024**
**Time : 11.47.P.m to 12.56 P.m.**

**<u>தொ.த.சா.1 திரு.தயாளன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4 ஊழியர்கள் Team Leader ஆக பணியை ஏற்றுக்கொண்டு பணி தொடர்ந்து கொண்டு இருக்கிறார்கள், 5 ஊழியர்கள் ராஜினாமா செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். சங்கமானது மீதமுள்ள 23 ஊழியர்களுக்காகதான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் ஆமாம். ஆனால் ஊழியர்கள் இல்லை அவர்கள் தொழிலாளர்கள். 23 பேரில் 2பேர் புனேவிற்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு வேலை செய்து வருகிறார்கள் என்றால் புனேவில் இருந்து அவர்களை சங்கம் ஒரகடம் யூனிட்டிற்கு அழைத்து வந்து விட்டது. அவர்கள் ஓரகடத்தில் இருந்த போது என்ன பணி செய்து வந்தார்களோ அதே பணியை தான் புனேயில் இருந்து வந்த பிறகும் செய்கிறார்கள் என்றால் ஆமாம். இன்றைய தேதியில் 93 ஆப்ரேட்டர்ஸ், 35 NAPS/Apprentice, 41 Casuals, உள்ளர்கள் என்றால் இருக்கலாம். நான் ஆரம்பத்தில் ITI படித்திருந்தேன் என்றால் ஆமாம். நான் ஆப்ரேட்டர் Electrician பணியில் அமர்த்தப்பட்டேன் என்றால் ஆமாம். Team Leaders அனைவரும் Diploma Holders என்றால் சரிதான். நான் வேலையில் சேர்ந்தபோது எத்தனை ITI Holders யை ஆப்ரேட்டர் ஆக எடுத்தார்கள் என்றால் சுமார் 150 பேர். அதில் பயிற்சியாளர்களும் அடங்குவார்கள். நான் 14 வருடங்களாக பராமரிப்பு பிரிவில் உள்ளேன். எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் மொத்தம் 6 பிரிவுகள் உள்ளன. தற்சமயம் Assembly பிரிவில் 4 Team Leaders களும் Forgings பிரிவில் 6

Team Leaders களும், Quality பிரிவில் 1 Team Leaderரும், Machining பிரிவில் 16 Team Leaders களும் இருந்தார்கள் என்றால் இதைவிட கூட இருப்பார்கள். மேற்சொன்ன பிரிவுகளில் உள்ள Team Leaders இந்த தாவாவில் அடங்குவார்கள் என்றால் ஆமாம். அனைத்து பிரிவுகளிலும் ஆப்ரேட்டர்கள் சுமார் 93 பேர் இருப்பார்கள். 93 பேரில் Diploma படித்தவர்களும் உள்ளடங்குவர். எங்கள் சங்கம் நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். சங்கத்துடன் போட்ட ஒப்பந்தம் அடிப்படையில் தான் ஆப்ரேட்டர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது என்றால் ஆமாம். அனுபவத்தின் அடிப்படையில் ஊதியம் வேறுபடும் என்றால் ஆமாம். Team Leaders களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறதா என்றால் 2015ல் ஒப்பந்தம் போடப்பட்டது ஆனால் அதன்படி சம்பளம் கொடுக்கப்படவில்லை. 2012லிலும் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. 2012ல் Team Leaders களுக்கு ஒப்பந்தபடி சம்பளம் வழங்கப்பட்டதா என்றால் 2012ல் அவர்கள் பயிற்சியாளரர்களாக தான் இருந்தார்கள். Team Leaders களுக்கு வருடத்திற்கு ஒரு முறை ஊதியம் உயர்த்தி வழங்கப்படும் என்றால் ஒவ்வொரு முறையும் சங்கம் தலையிட்டுதான் நிர்வாகம் இரண்டு ஆண்டுகளுக்கு சேர்த்து ஊதிய உயர்வு கொடுக்கும். அதுபோன்று இரண்டு முறை பிரதி ஆண்டு கொடுக்காமல் சேர்த்து சேர்த்து கொடுத்துள்ளர்கள், சங்கம் ஆப்ரேட்டர்களுக்கு போட்ட ஒப்பந்தம் தற்சமயம் வரை அமலில் உள்ளது என்றால் ஆமாம். சங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் ஒப்பந்தம் ஷரத்து பொருத்து கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரியல்ல. 12(3) செட்டிமெண்ட் சரிவர நடைமுறைபடுத்தபட வில்லை என சொல்லி தொழிற்தாவா எழுப்பப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த தொழிற்தாவாவின் விவரத்தை இந்த வழக்கில் சொல்லி உள்ளேன். அதன் மனு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்றைய தேதிவரையில் ஒப்பந்தம் யாருக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த தொழிலாளர்கள் ஊதியம் வாங்கி வருகிறார்கள் என்றால்

ஆமாம். Team Leaders களுக்கு Team Leaders Allowance வழங்கப்படுகிறது என்றால் ஆமாம். Team Leaders கள் 2023 வரை அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வை பெற்றுக்கொண்டுவிட்டார்கள் என்றால் 2020 - 2021 ஆண்டிற்கு 2022ல் வாங்கி உள்ளார்கள். 2021 - 2022 வருடத்திற்கும் 2023ல் வாங்கி உள்ளார்கள் என்றால் இல்லை. தொ.சா.ஆ9 தான் 2015ல் நாங்கள் போட்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அதில் யார் யாருக்கு பொருந்தும், பொருந்தாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். Team Leaders தான் ஒவ்வொரு லைனிலும் Front லைன் சூப்பர் வைசர் என சொல்லப்படுவார்கள் என்றால் இல்லை. Team Leaders களுக்கு வருடத்திற்கு ஒரு முறை திறன் ஆய்வு உள்ளது என்றால் ஆமாம். Team Leaders களுக்கு Assent Portal உள்ளது என்றால் அவர்களுக்கு மட்டும் இல்லை அனைவருக்கும் உள்ளது. ஆப்ரேட்டர்கள் Leave எடுக்க வேண்டும் என்றால் மேற்படி Portalலில் தான் விண்ணப்பிக்க வேண்டும் என்றால் ஆமாம். ஒப்பந்தத்தில் என்ன பணி செய்ய வேண்டும், எவ்வளவு உற்பத்தி கொடுக்க வேண்டும், அதற்கான ஊதியம் எவ்வளவு என உள்ளது என்றால் ஆமாம். Portalலில் விண்ணப்பிக்கும் விடுப்பிற்கு முதலில் Team leader கள் Approval கொடுத்து கொண்டு இருந்தார்கள் என்றாலும் வழக்கு இருக்கும் காரணத்தினால் Approval கொடுக்க முடியாது என சொன்னதின் பேரில் தற்போது Value Stream Leader Approval செய்கிறார்கள் என்றால் Team leader கள் எப்போதும் Approval செய்வது இல்லை. Team leader கள்தான் Approval செய்து கொண்டு இருந்தார்கள் என்றாலும் வழக்கு இருக்கும் காரணத்தினால் செய்வதில்லை என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்திஇந்த வழக்கில் சம்மந்தப்பட்டவர் வழக்கை வலியுறுத்தவில்லை என சொல்லி Team leader ஆகவே தொடர்ந்து வருகிறார் என்றால் ஆமாம். ஆனால் சங்கத்தில் இருந்து வெளியே போய்விட்டார். அவர் Machine பிரிவில் இன்றைய தேதி வரை Leave Approval செய்கிறார் என்றால் தொழிற்சங்கத்தில் இருந்த

வரை செய்யவில்லை விலகிய பிறகு செய்கிறார். தொழிற்சங்கத்தில் இருந்த காரணத்தினால் சங்கம் கேட்டுக்கொண்டதின்பேரில் தான் Team leader கள் Leave Approval செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் எப்போதும் செய்ததில்லை என்பதால் செய்யவில்லை. எனக்கும் நிர்வாகத்திற்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் எதுவும் இல்லை. Team leader களுக்கு official E-mail ID உள்ளது. எனக்கு official E-mail ID இல்லை. என்னை போன்ற தொழிலாளர்களுக்கு உள்ளது. தொழிலாளர்களுக்கு official E-mail ID இல்லை என்றாலும் Team leader மற்றும் அதற்கு மேல் உள்ள ஊழியர்களுக்கு தான் official E-mail ID உள்ளது என்றாலும் சரியல்ல. காலை மற்றும் மதிய உணவு இடைவேளை தலா அரைமணி நேரம் ஆகும் என்றால் காலை நேரம் கிடையாது மதியம் அரைமணி நேரம். Team leader களுக்கு குறிப்பிட்ட உணவு இடைவேளை இல்லை என்றாலும் எப்போது வேண்டுமானாலும் விரும்பும்போது கேண்டினில் சென்று உணவு உண்ணலாம் என்றால் இல்லை. வெளியில் போக அனுமதி பெற்று Gate Pass வாங்க வேண்டும் என்றால் ஆமாம். ஒரு பிரிவில் இருந்து மற்றொரு பிரிவிற்கு tools கொண்டு போக வேண்டும் என்றால் Material Pass வாங்க வேண்டும் என்றால் ஆமாம். சுந்தரமூர்த்தி Gate Pass, Material Pass ஆகியவற்றை அவருடைய பிரிவிற்கு அவர்தான் வழங்கி வருகிறார் என்றால் தெரியாது. Team Leader களை வெளியூரில் உள்ள வேறு கம்பெனிகளுக்கு tools சரிபார்க்க அனுப்புவார்கள் என்றால் தெரியவில்லை. என்னை வேறு ஊரில் உள்ள கம்பெனிகளுக்கு அனுப்பி உள்ளார்களா என்றால் என்னை அனுப்பியது இல்லை. 32 பேரும் சூப்பர்வைசர் நிலையில் தான் பணி புரிகிறார்கள் என்றாலும் அவர்கள் ஊழியர்கள், தொழிலாளர்கள் இல்லை என்றாலும் சங்கத்தில் சேர்ந்த காரணத்தினால் மட்டுமே ஊழியர்கள் தொழிலாளர்களாக விளம்புகை செய்ய வேண்டும் என கேட்கும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பணி தன்மையும்

32பேரின் பணி தன்மையும் வேறுவேறானது என்றாலும் நான் அவர்களுக்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 32 பேரும் தொழிலாளர்கள் என்ற வரையரைக்குள் வரமாட்டார்கள் என்றாலும் அதனால் சங்கம் எழுப்பி இருக்கும் கோரிக்கை சரியல்ல என்றாலும் தவறு. இன்றைய தேதியில் 23 பேர் மட்டுமே உள்ளார்கள் என்றாலும் அவர்களுக்காக சங்கம் வழக்கை வலியுறுத்த இயலாது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/.S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:10.09.2024